# தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் – திருநெல்வேலி பிரிவு
## மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டுப்போட்டியில் 521 வீரர்,வீராங்கனைகள் சாதனை.
## பத்திரிக்கைச் செய்தி

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில், மாற்றுத்திறனாளிகளை ஊக்குவிக்கும் பொருட்டு, 2017–2018 ஆம் ஆண்டிற்கான மாவட்ட அளவிலான மாற்றுத் திறனாளிக்களுக்கான தடகளம் மற்றும் குழு விளையாட்டுப் போட்டிகள் பாளையங்கோட்டை அண்ணா விளையாட்டரங்கில் வைத்து 31.10.2017 காலை 09.00 மணிமுதல் நடைபெற்றது. இதில் திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த மாற்றுத்திறனாளிகள் சுமார் 521 பேர் கலந்துகொண்டார்கள். இப்போட்டிகளை டாக்டர்.S.பிரேமச்சந்திரன், செல்வன் மருத்துவமனை, மேலப்பாளையம் தலைமை தாங்கி துவக்கி வைத்தவர்கள்.

**போட்டிகளில் வெற்றிபெற்றவர்கள் விபரங்கள்.**

**தனிநபர் போட்டிகள்:-**

**கை,கால் ஊனமுற்றோா்**

**ஆண்கள் பிரிவில்,______ 50மீ ஓட்டம்.**முதல் இடம் S.M.அப்துல் ரஹ்மான்(மெக்தலின் மெட்ரிக் மேல்நிலைபள்ளி,பாளையங்கோட்டை),இரண்டாமிடம் புகாரி சேட் (அன்னை ஜோதி சிறப்பு பள்ளி) மூன்றாமிடம், கார்த்தி (அன்னை ஜோதி சிறப்பு பள்ளி)

**மனநலம் பாதிக்கப்பட்டோர் ஆண்கள் 50மீ ஓட்டம்.** முதல் இடம் செய்யது அப்துல் காதர்(Scad சேரை),எஸ்.மணிகண்டன் (அன்னை ஜோதி சிறப்பு பள்ளி),கணேஷ் ஐயப்பன் (Scad சேரை),

**பார்வையற்றோர் மாணவர் 100 மீ ஓட்டம்** முதல் இடம் A அரவிந்த் (பார்வையற்றோர் மேல்நிலைபள்ளி, பாளை), (Scad சேரை), என். ஸ்ரீஜித் (பார்வையற்றோர் மேல்நிலைபள்ளி,பாளை), m.சக்திபாலா (பார்வையற்றோர் மேல்நிலைபள்ளி,பாளை),

**காது கேளாதோர் ஈட்டி எறிதல் (பெண்கள்)**
முதல் இடம் நந்தினி , சுபலெட்சுமி இரண்டாமிடம், முத்துலெட்சுமி மூன்றாமிடம்

**குழு விளையாட்டு போட்டிகள்**
**வாலிபால்** முதலிடம் : ஆண்கள் : பார்வையற்றோர் மேல்நிலை பள்ளி முதலிடம்
இரண்டாமிடம்: : பார்வையற்றொர் மேல்நிலை பள்ளி இரண்டாமிடம்

**வாலிபால் பெண்கள்** முதலிடம் : பார்வையற்றோர் மேல்நிலைபள்ளி ,பாளையங்கோட்டை
இரண்டாமிடம் : பார்வையற்றோர் மேல்நிலைபள்ளி, பாளையங்கோட்டை

**எறிபந்து : ஆண்கள்:** முதலிடம் செய்யது அப்துல் காதர், SCAD
இரண்டாமிடம் கணேஷ் கவுதம்

31.10.2017 மாலை 04.00 மணிக்கு நடைபெற்ற பரிசளிப்பு விழாவிற்கு திருநெல்வேலி மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் திரு. ர.வீ.வீரபத்ரன் அவர்கள் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கினார்கள். மாவட்ட மாற்றுத்திறனாளிகளுக்கான நலஅலுவலர் திருமதி. சாந்தி குளோரி எம்ரால்டு அவர்கள் கலந்து கொண்டார்கள். மாற்றுத்திறனாளிகளுக்கு, லெமன் ஜூஸ், தேநீர், சிற்றுண்டி, குடிநீர், மதியஉணவு ஆகியவற்றை இலவசமாக வழங்கப்பட்டது. போட்டியில் கலந்து கொண்டவர்களுக்கு நினைவுபரிசுகள் வழங்கப்பட்டது. மேலும் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பதக்கங்கள், சான்றிதழ்கள்,பரிசுகள் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் பயிற்சியாளர்கள் ஜிம்னாஸ்டிக் பயிற்றுநர் திரு. தாசன், குத்துச்சண்டை பயிற்றுநர் திரு. சிவ்குமார் பால், வாலிபால் பயிற்றுநர் திரு. வெங்கடஷே , கூடைபந்து பயிற்றுநர் திரு. பழனி விக்னேஷ், திரு. அமலராஜன் கூடைப்பநது பயிற்நுர் ,தடகள பயிற்றுநர் திரு. சத்யகுமார், நீச்சல் பயிற்றுநர் திரு.கர்ணன், உடற்கல்வி ஆசிரியர்கள் .

மேற்கண்ட தகவலை திருநெல்வேலி மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் தெரிவித்தார்கள்.

ஒம்/–
மாவட்ட விளையாட்டு மற்றும்
இளைஞர் நலன் அலுவலர்
திருநெல்வேலி.